
# தமிழ் இலக்கியங்களில்

## அறமும் அருளும்

தொகுதி 2
















பதிப்பாசிரியர்கள்
முனைவர் ஆ. மகாலட்சுமி
திருமதி சுகந்தி நாடார்
முனைவர் இலட்சுமி கார்மேகம்

தமிழ்த்துறை (அரசு உதவி), என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)
பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி - 642 001

“அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து,
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி,
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்”

(மதுரைக்காஞ்சி: 489-492)

“அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை” (திருக்குறள் -76)




**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)**
தேசிய மீள்தர மதிப்பீட்டு “ஏ” தகுதி
ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் 9001 – 2015
90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி – 642 001.

9789387009523

₹ 400/-

பிரபாக் பிரிண்ட் 0422 2646036

# தமிழ் இலக்கியங்களில் அறமும் அருளும்

## (பன்னாட்டுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள் : **முனைவர் ஆ. மகாலட்சுமி**
**திருமதி சுகந்தி நாடார்**
**முனைவர் இலட்சுமி கார்மேகம்**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : ஜனவரி, 2019

வெளியீடு : **தமிழ்த்துறை (அரசு உதவி)**
**என்.ஜி.எம் கல்லூரி**
பொள்ளாச்சி - 642 001.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்
476 பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017

பக்கங்கள் : **XVIII + 348 - 366**

விலை : உரூ. 400/-

**ISBN : 978 - 93 - 87009- 52 - 3**


# Ethics and Devotion in Tamil Literature
## (International Conference)


Editors : **Dr. A. Mahalakshmi**
**Miss. Suganthi Nadar**
**Dr. Lakshmi Karmegam**

Copyrights : Editors

First Edition : January, 2019

Published by : **Department of Tamil**
**N.G.M. College**
Pollachi - 642 001.

Computer : **Prdag Print**, Coimbatore - 29.

Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages : **XVIII + 348 - 366**

Prize : **Rs. 400/-**

86

# தத்துவநோக்கில் சக்தி

முனைவர் ஆ. மகாலட்சுமி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி.

உலகத்தில் உள்ள பொருள்கள் தாம் காரணமாயிருந்து பல காரியங்கள் செய்வதற்கு அவற்றிடையேஆக்கும் சக்தியொன்று இருப்பது போலவே, கடவுள் தாம் காரணமாக அமைந்து உலகத்திலுள்ள பொருட்களை உண்டாக்குவதற்கு ஆக்கும் சக்தியொன்றினைப் பெற்றுள்ளார். இத்தகைய சக்தியொன்று கடவுளிடம் உண்டுஎன்று கூறுவதோடுஅமையாது, இதைப் தெய்வமாக வழிபடுவோரும் உளர். இச்சக்தியின்றிக் கடவுள் எதுவும் செய்ய முடியாத தாகையால் அச்சக்தியை உடைய கடவுள் முக்கியமாகக் கருதப்பட்டது.

தெய்வதத்துவமாகிய சக்தியை வழிபடுகின்ற ஆரம்பநிலைரிக் வேதத்தில் காணப்படுகின்றது. ஆற்றலில் வடிவமாக அவள் வருணிக்கப்படுகின்றாள். வானுலகவாசியாகவும் கருதப்படும் அவள் நிலவுலகைக் காப்பாற்றுகின்றாள். அண்டங்களைத் தாங்குகின்ற பேராற்றலாகச் சக்தி வருணிக்கப்படுகின்றாள். காலப்போக்கில் பொன்னிறம் உள்ள உமையுடன் சக்தி ஒன்றாக்கப்பட்டாள். மகாபாரத்தில் கண்ணனின் தங்கையாக்கப்பட்டுவைணவத்துடன் தொடர்பு படுத்தப்பட்டாள். சைவர்கள் அவளைச் சிவனின் மனைவியாக்கினர். இத்தகைய நிலையில் சக்திஅமைகின்றாள்.

## சக்தி என்பதன் பொருள்

சிவன் சக்தியுடன் இணையும் பொழுதுதான் படைப்புத் தொடங்குகின்றது. இணையாத நிலையில் சிவன் அசைவற்றிருக்கும் என ஆதிசங்கராச்சாரியார் கூறுகின்றார்.

கோணலானமனத்தைக் கருவியாகக் கொண்டு சிவனைக் காணுதலே திரிவுபட்ட தோற்றத்திற்குச் காரணமாகும். இந்நிலையில் இருக்கும் நாம் ஒழுங்குபடுத்தற்குசக்திதத்துவமும் சக்திவழிபாடும் பெரிதும் பயன்படுகின்றன. சிவன் என்பது மெய்ப்பொருள். பிரியாத இதனிடத்து நிலைத்துள்ள விபூதி அல்லது சம்பலுக்குச் சக்தி என்று பெயர் கூறலாம். அண்டங்கள் அனைத்தும் சிவசக்தி மயமாக இருக்கின்றன. சிவம் என்பது அறிவுப்பொருள். சக்திஎன்பது ஜடப்பொருள். இவையிரண்டும் இணைபிரியாது உலகம் முழுவதும் இயங்குகின்றன.



சித்தாந்த சைவமானது ஞானம், கிரியை, இச்சை என்ற மூன்று பிரிவைக் கொண்ட கடவுளுடைய சித்து அம்சமே சக்தி என்று கூறுகிறது. அவள் சூரியனும் சூரியகிரணமும் போல் ஒன்றாகவும் வேறாகவும் இருப்பவள் என்றும் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில்களையும் செய்பவள் என்றும் கூறுகின்றது.

சிவன் அறிவாகக் கருதப்பட்டால், சக்தி அறிவினை ஆக்குகின்ற ஆற்றலாகக் கொள்ளப்படுகின்றாள். சக்தியின் ஆணைக்குட்பட்டே நான்முகன் படைக்கின்றான். மால் காக்கின்றான். உருத்திரன் அழிக்கின்றன். எனவே சக்திமும்மூர்த்திகளுக்கும் மேம்பட்டவளாகக் கருதப்படுகின்றாள் என்று டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் கருதுகிறார்.

உலகை ஆட்டிப்படைக்கின்ற ஆற்றல்களாகிய இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்ற மூன்றும் சக்தியின் கூறுகளாகக் கருதப்பட்டுகின்றன. இம்மூன்று சக்திகளைச் சிவபெருமானின் முக்கண்களாக தீச்சவதி, காரணாகமம் என்னும் சைவ நூற்கள் கூறுவது இவண் கருதத்தக்கது. அன்புக்கும் அதன் கிளைகளாகவரும் உணர்ச்சிகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கும் அஞ்ஞான அந்தகாரத்தை அகற்றவல்லது ஞானசக்தியென்பதும் நல்வினை ஊக்கத்தைப் பெற்று இயல்பாக அமையப் பெற்றுள்ளது கிரியாசக்தி என்பதும் உணரத்தக்கன.

சக்தியைப் பற்றியஞானம் வீடுபேற்றிற்கு அடிப்படையாக அமைகின்றது. பக்தி ஒன்றே சக்தியை அடைவதற்கு துணைசெய்கின்றது. சப்தவடிவமாவும் சக்தி இருக்கின்றாள். அதனால் சக்திமந்திரங்கள் புனிதமாகக் கருதப்படுகின்றன. அடியவன் குண்டலினி சக்தியை மேல்நோக்கி எழுப்பி ஆறு ஆதாரங்களக்குக் கொண்டுசெல்கின்றால் என்று இந்தியதத்துவம் என்னும் நூல் கூறுகின்றது.

தனக்கு நிலைக்களமான இறைவனின் வெளித்தோற்றமாக அமைகின்ற சக்தியானது சத்துவ குணத்தை அடைந்தால் காப்பாற்றும் சக்தியென்றும் இராசகுணத்தை அடைந்தால் சீவராசிகளைப் படைக்கும் சக்தியென்றும் தாமதகுணத்தை அடைந்தால் அழிக்கும் சக்தியெனவும் அழைக்கப் பெறுகின்றது. மேலும் பிராமி, நாராயணி, ரௌத்திரி முதலான சக்திகளும் முன்னர் கூறியபரப்பிரமத்தின் ஒருவகைத் தோற்றமாகிய சக்தியின் வெளிப்படையாக தனித்தனித் தோற்றங்களாகும்.

## சிற்பபார்வையில் சக்தி

சிலப்பதிகாரவேட்டுவ வரியில் ஒருவர் வாளைக் கையில் ஏந்திநிற்க, மற்றவர் தன் தலையை வாளால் அரிந்துதேவியின் காலடியில் அவிப்பலியாக இடும் நிலையும் காணப்படுகின்றது. பழங்காலத்தில் மற்றோரிடமிருந்து தன் நாட்டைக் காக்கநெடுமொழி கூறிய மறவர்கள் வெற்றிகிட்டியதும் கொற்றவைக்குத் தன் தலையை அரிந்து அவிப்பலி இடுதல் மரபு. அச்செயல் மன்னன் சிறப்போடு வாழவேண்டும் என்று போற்றுவதையே குறிக்கின்றது.

"சுடரொடுதிரிதருமுனிவரும் அமரரும்
இடர்கெடஅருளுநின் இணையடிதொழுதேம்
ஆடல்வலிஎயினர்நின் அடிதொடுகடனிது
மிடறுகுகுருதிகொள் விறல்தருவிலையே"
(சிலப்பதிகாரம்:வேட்டுவவரி- 18)

"அடுபுலியனையவர் குமரிநின் அடிதொடு
படுகடன் இதுவுகு பலிமுகமடையே"
(சிலப்பதிகாரம்:வேட்டுவவரி- 20)

என்ற பாடலடிகளின் நோக்கில் இங்குள்ளகொற்றவையின் சிறப்பச்சிறப்பினை அடைகிறது.

## சக்தியின் வகைப்பாடுகள்

அறிகின்றான், விரும்புகின்றான், முயல்கின்றான் என்ற வழக்குகளின் பிரமாணத்தினால் ஞானம், இச்சை, கிரியை என்ற வடிவமாய் இருப்பதோடு மகத்தத்துவம்,அ கங்காரம், பஞ்சபூதங்கள், ஞானேந்திரியங்கள், கண்மேந்திரியங்கள், மனம், புத்தி, பிராணன், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொடுதல், பேசுதல், எடுத்தல், போதல், விடுதல் முதலிய பலவித செய்கைகளும் இச்சக்தியின் வடிவங்களாகக் கருதப்படுகின்றன. இவ்வாறு சக்தி, மனத்தால் நினைக்க முடியாததாகவும் கண்ணால் காண இயலாததாகவும் தொடக்கம், நடுநிலைமை, முடிவு என்ற மூன்றும் அற்றதாகத் தெய்வத் தத்துவமாகக் காட்சியளிக்கின்றாள்.

## சப்தமாதர்கள்

ஒவ்வொரு சக்திக்கும் பெயரும் எழுத்தும் மக்கள் அமைத்தனர். இச்சத்திகள் இசைபாடுவதாயும் இவ் இசையினின்றேஉலகம் படைக்கப்படுகின்றதென்றும் கண்டனர். இவ்வாறு இறைவனோடு ஒன்றியே நிற்கும் சக்தியை "ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ" என்ற ஏழு குறியீடுகளாக அமைத்து இவை ஏழிசையையும் குறிப்பதாகக் கருதியதுமன்றி, ஏழு சத்தியையும் ஏழு கன்னிகைகளாகவும் திருக்கோயில்களில் சிலை அமைத்து வழங்கினர். இம்மரபினின்றே வானத்தில் தோன்றும் விண்மீன் தொகுதி ஒன்றுக்கு சப்தரிஷிமண்டலம் என்று அமைத்தனரோவென்று எண்ணலும் தகும். ஒருவாரத்திற்கு ஏழுகிழமைகள் என்று உலகம் முழுவதும் அமைந்திருப்பதையும் இவண் கருதலாம். "ச,ரி,க,ம,ப,த,நி" ஏழாக அமைந்திருப்பது சப்தமாதர்களைக் கருதியது என எண்ணவும் தோன்றுகிறது. சப்தமாதர்களாகபிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளிமுதலியோர் கூறப்படுகின்றனர்.

## பிராமி

சதுர்ப்புஜம், விசாலாட்சி, ஒளிக்கும் பொன்மேனி, வரதமி, அபயம், கமண்டலம், அட்சமாலிகை, இம்சத்வஜம், ஜடாமகுடம், பத்மாசனம், உள்ளவளாய் அன்னவாகன மூர்த்திருப்பவளாய் பிரம்மரூபினியாய் காட்சியளிக்கின்றாள்.



## மகேசுவரி

வெள்ளைநிறம், திரிநேத்ரம், சூலம், அபயம், வரதம், அட்சமாலை, விருட்சபத்வஜம், ஜடாமகுடம்,உரக பூஷணம் உள்ளவளாய், விருஷபவாகனம் உடையவளாய் மகேசரூபினியாய்க் காட்சியளிக்கின்றாள்.

## கௌமாரி

கௌமார வடிவத்தைக் கொண்ட கன்னிகையாய், இரத்னமகுடம் அணிந்தவளாய், அங்குசம், வேல், இபயம், வரதம், செம்பட்டாடை, அரகேயூர பூஷணம், குங்கும் நிறங்கொண்டு மகாவீரியம் உள்ளவளாய் மயில் துவஜம் மயில் வாகனம் ஊர்ந்திருப்பவள்.

## நாராயணி

பத்மபத்ரவிசாலாட்சியாய் சியாமளவர்ணமுள்ளவளாய், மகாபலங் கொண்டவளாய்ச் சங்கு, சக்கரம், அபயம், வரதமாகிய நான்கு கரங்களைக் கொண்டவளாய்க் கருடத்வஜம் கொண்டு கருடவாகனம் ஊர்ந்திருப்பவள்.

## வராகி

கறுப்புப் பட்டாடை உடையவளாய் வராகமுகத்தவளாய்ச் சம்பத் கரியாய், பவித்ராலங்கிருபத்தினை உடையவளாய்க் கலப்பை, அபயம்கொண்டு கறுப்பு அணிந்திருப்பவள்.

## இந்திராணி

வஜ்ரபாணியாய் இரண்டு கண்களுடன் அழகுள்ள. ஆடை அணிந்தவளாய், வரதம், அபயம் என்ற சக்தி கொண்டு கஜத்வஜம் உள்ளவளாய் யானைவாகனம் ஊர்ந்திருப்பவள்.

## காளி

திரிநேத்ரம், சூலம், கட்கம், அம்பு, சக்கரம், ஒருபுறத்திலும், பாசம், பலகை, சார்ங்கம், சங்கம் மற்றக்கரங்களிலும் கொண்டு எட்டுகைகளை உடையவளாய்ச் சடாமகுடம் கொண்டுமகிடவாகனம் ஊர்ந்திருப்பவளாகக் காட்சியளிக்கின்றாள்.

சப்தமாதர்களின் படைகளாக, பிரமாணிக்கு வேதமும், மகேசுவரிக்கு பினாகமும், கௌமாரிக்கு வேலும், நாராயணிக்குச் சக்கரமும் வராகிக்குத் தண்டும் இந்திராணிக்கு வச்சிராயுதமும் காளிக்குச் சூலமும் கூறப்பட்டுள்ளன.

தமிழ் நூல்களில் சத்தமாதர் வழிபாட்டினைக் காணலாம். குமரகுருபர அடிகள் ஈந்தருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமிபிள்ளைத் தமிழ் முதலியதிருப்பாடல்களில் சத்தமாதர், முப்பத்து மூவர் வணக்கங்கள் அமைந்துள்ளன. கலிங்கத்துப்பரணி என்ற பரணி இலக்கியத்தில் கடவுள் வாழ்த்தில் ஏழு கன்னிகைகளுக்கு வணக்கம் தனித்தனியே அமைக்கப்படுவதுடன் அவர்களுக்குரிய கொடியும் சுட்டப்பட்டுள்ளன.

## சக்தியும் பாவைநோன்பும்

சங்ககாலத்தில் பாவைநோன்பு சைவ சமயத் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. பாவை நீராடல் பற்றிக் கூறும் பரிபாடல் பதினோராம் பாடலில் நீராடும்பொழுது, ஒரு பெண் மற்றொரு பெண்ணின் நெற்றியில் சிவந்தபொட்டிட்டு அவளைக் கொற்றவைபோலத் தோற்றமளிக்குமாறு செய்தாள் என்ற குறிப்புக் காணப்படுகிறது. மார்கழிமாதத் திருவாதிரை முழுமதியில் சக்தியின் கணவனாகிய சிவபெருமானுக்கு விழாநிகழும்பொழுது பாவைநீராடல் நிகழ்வதாக அதேபரிபாடல் கூறுகின்றது. முக்கண்ணை உடைய சிவபிரானது ஆலமுற்றம் என்னும் தலத்தில் உள்ள பொய்கை சூழ்ந்தபொழின்கண் கன்னிகள் பாவை இயற்றியது பற்றிய குறிப்பை அகநானூறு குறிப்பிடுகின்றது.

சக்திக்குப் பாவை நோன்பு இயற்றும் பொழுது ஈரவெண் மணலால் சக்தியின் பாவைவடிவம் செய்து அதற்குக் கிரியைகளும் செய்து கன்னியர் வழிபடுவர்.

> ***"வையத்துவாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்குச்***
> ***செய்யும் கிரியைகள் கேளீரே" (திருப்பாவை 2 : 1-1)***

என்ற பாடலடிகள் கிரியைகள் செய்துவழிபடும் தன்மையினைக் கூறுகின்றன. வீட்டுவாழ்விற்கு நல்ல கணவரைப் பெறுவதற்கும் நாட்டுச் செழிப்பிற்கு நல்ல மழையைப் பொழிவிப்பதற்கும் இந்நோன்பில் சக்தியைக் கன்னியர் வழிபடுவர்.

## சக்தி வழிபாடு

யாகம், தவம், தீர்த்தம் ஆகிய மூன்று வழிகளையும் கடைப்பிடிக்க இயலதோர் தோத்திரத்தால் வழிபாடும் முறையை மேற்கொள்கின்றனர். அல்லலுற்ற நிலையில் தலைவணங்கிக் கை கூப்பிமெய்யரும்பல் முதலிய மெய்ப்பாடுகள் தோன்றப் பாடும் வகையில் சக்தியை வழிபடுவோர் தோத்திரங்கள் கூறி வணங்குங்கின்றனர்.

தூய்மையான சூழ்நிலையில் பக்தியை அடிப்படையாகக் கொண்டு கடைப்பிடிக்கப்படும் விரதம் ஒரு தனிக்கிரியையாக இலங்குகின்றது. உடையைக் குறித்துக் கடைப்பிடிக்கப்படுவது நவராத்திரி, மகாநவமி முதலிய விரதங்களாகும். உமாமகேசுவர விரதம், கோதாரகௌளரி விரதம் சிவனையும் உமையையும் குறித்துக் கொள்ளப்படுவன.

யாகம் முதலிய வழிபடும் முறைகளில் சிறந்த அம்சங்களை உறுப்புக்களாகக் கொண்டு பூசை என்னும் வழிபாட்டு முறை தோன்றியது. இம்முறை சக்தி வழிபாட்டில் கடைபிடிக்கப்பட்டுகிறது.

நிறைவாக, சக்தி வழிபாடு என்பது மிகப் பழங்காலத்தில் தோன்றிதாய் வழிபாட்டின் வளர்ச்சியே சக்திவழிபாடாகும். சக்தியை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்கள் சார்ந்துள்ள சமயமே சக்தி எனலாம். இவ்வழிபாடே காலப்போக்கில் பல தத்துவங்களில் பலபெயர்களில் வழங்கலாயின.